போட்டித் தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு

# ஒட்டன்சத்திரத்தில் ரூ.10.50 கோடி மதிப்பீட்டில் பயிற்சி மையம்!

## அமைச்சர் அர.சக்கரபாணி தகவல்!



திண்டுக்கல், ஜூலை 6 -

ஒட்டன்சத்திரம் நகர் பகுதி லெக்கையன் கோட்டை பிரிவு முதல் குழந்தை வேலப்பர் கோவில் வரை நெடுஞ்சாலையில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட மின் விளக்குகளை பொது மக்கள் பயன்பாட்டிற்காக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி இயக்கி வைத்தார். திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் நகர் பகுதி லெக்கையன்கோட்டை பிரிவு முதல் குழந்தை வேலப்பர் கோவில் வரை நெடுஞ்சாலையில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட மின் விளக்குகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி இயக்கி வைத்தார். திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது:

முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து, அவற்றை திறம்பட செயல்படுத்தி வருகிறார். தேர்தல் நேரத்தில் கூறிய வாக்குறுதிகளைநிறைவேற்றியதோடு, சொல்லாத பல திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி வருகிறார்.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் பொதுமக்களுக்குத் தேவையான அனைத்து வசதிகள், அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து அவற்றை மறுபயன்பாட்டிற்கு தயார்படுத்தும் வகையில் ரூ.7 கோடி மதிப்பீட்டில் குப்பை கிடங்கு 20 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது.

ஒட்டன்சத்திரம் நகர் பகுதி லெக்கையன் கோட்டை பிரிவு முதல் குழந்தை வேலப்பர் கோவில் வரை நெடுஞ்சாலையில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட மின் விளக்குகள் பொது மக்கள் பயன்பாட்டிற்காக இன்று இயக்கி வைக்கப்பட்டுள்ளது. ஒட்டன்சத்திரம் நகராட்சி தமிழகத்திலேயே முன்னோடி நகராட்சியாக மாற்றும் வகையில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் இரண்டு புதிய கல்லூரிகள், ஒரு தொழிற்பயிற்சி நிலையம் தொடங்கப்பட்டுள்ளன. போட்டித் தேர்வுக்கு தயாராகி வரும் மாணவ, மாணவிகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக ஒட்டன்சத்திரத்தில் பயிற்சி மையம் தொடங்கப்பட்டுள்ளது. அதற்கு காளாஞ்சிப்பட்டியில் ரூ.10.50 கோடி மதிப்பீட்டில் கட்டடம் கட்டுமான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இந்த பணிகள் இன்னும் 6 மாதங்களில் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த போட்டித்தேர்வுக்கு தயாராகி வரும் மாணவ, மாணவிகளுக்கு இந்த மையத்தில் சிறந்த பயிற்சியாளர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்படும். மத்திய, மாநில அரசு வேலைவாய்ப்பிற்கான போட்டித்தேர்வுகள் அனைத்திற்கும் இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

பரப்பலாறு அணை தூர்வாறும் பணிகள் இன்னும் 10 நாட்களில் தொடங்கப்படவுள்ளது. மேலும் பரப்பலாறு அணை பகுதியை சுற்றுலாத் தலமாக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த ஆண்டு 15 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 35 இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யப்படவுள்ளன. தமிழகத்தில் வனப்பகுதியை 33 சதவீதம் பரப்பளவிற்கு இருக்கும் வகையில் மரக்கன்றுகள் நட்டு தமிழகத்தை பசுமை மாநிலமாக மாற்ற முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள்.

தமிழகத்தில் 10,000 கி.மீட்டர் சாலைகளை சீரமைக்க ரூ.4,000 நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நெடுஞ்சாலைத் துறை மூலம் 500 கி.மீட்டர் ஊராட்சி ஒன்றிய சாலைகள் தார்ச்சாலைகளாக மாற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது. ஒட்டன்சத்திரம் தொகுதியில் சாலைகள் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ரயில்வே மேம்பாலங்கள் அமைக்கப்படவுள்ளன.

முதலமைச்சர் அவர்கள், தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி பொற்கால ஆட்சி நடத்தி வருகிறார், என அமைச்சர் அர.சக்கரபாணி பேசினார்.

இந்நிகழ்ச்சியில் ஒட்டன்சத்திரம் நகராட்சித் தலைவர் திருமலைச்சாமி, துணைத்தலைவர் வெள்ளைச்சாமி, ஒட்டன்சத்திரம் நகராட்சி ஆணையாளர் சக்திவேல், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (04.07.2023) நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் சிற்றுண்டி மற்றும் உணவு பரிமாறும் கூடத்தினை பார்வையிட்டு மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்படுகின்ற உணவின் தரம் குறித்து ஆய்வு செய்தார்.

கலைஞர் நூற்றாண்டு நூலகம் குறித்து

# அமெரிக்காவில் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பெருமிதம்!

சான் பிரான்சிஸ்கோ, ஜூலை.5-

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ பொது நூலகத்தைப் பார்வையிட்டு பதிவேட்டில் பதிவிடுகையில்,

கலைஞர் என்றும் புகழப்படுவார்

ஒட்டுமொத்த இந்திய ஒன்றியத்திற்கும் மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் பிரமாண்ட அறிவுக் கருவூலம் "கலைஞர் நூற்றாண்டு நூலகம்", வரும் ஜூலை 15-ஆம் தேதி திறக்கப்படவுள்ள நிலையில் அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ பொது நூலகத்தை பார்வையிடும் வாய்ப்பு கிடைத்தது!

140 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்படும் இந்நூலகத்தின் கீழ் 25க்கும் மேற்பட்ட கிளை நூலகங்கள் இயங்குகின்றன. ஒவ்வொரு பருவத்தினருக்குமான நூல்களை வகைப்படுத்தி, சிறந்த உள்கட்டமைப்பு வசதிகளுடன் நிர்வகித்து வருகின்றார்கள்.

நூலக நிர்வாகத்தினருடன் உரையாடியபோது, நமது கலைஞர் நூற்றாண்டு நூலகத்தின் பிரமாண்டம் என் கண்முன் விரிந்தது!

ஆம்... சான் பிரான்சிஸ்கோ பொது நூலகத்தை விடவும் கலைஞர் நூற்றாண்டு நூலகம் மிகப்பெரும் பரப்பளவில் பிரமாண்டமாக மிகச்சிறந்த உள்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது என்பதை எண்ணி தமிழனாக பெருமையடைந்தேன். கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில் வைக்கப்படவுள்ள இலட்சக்கணக்கான புத்தகங்களின் வழியாக கலைஞர் என்றும் புகழப்படுவார்!





உலகம் போற்றும் நூலகம் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மாமதுரையில் ஜூலை 15ஆம் தேதி திறக்கப்படவுள்ளது.

#கலைஞர்100 நினைவு நூலகம்

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதிவிட்டுள்ளார்..

தமிழ்நாடு கல்குவாரி மற்றும் கிரஷர் உரிமையாளர்களின்

# காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் வாபஸ்!

சென்னை, ஜூலை 6 -

தமிழ்நாடு கல்குவாரி மற்றும் கிரஷர் உரிமையாளர்கள் சங்கம் கடந்த 26.6.2023 முதல் பல்வேறு கோரிக்கைகளை முன் நிறுத்தி காலவரையறை யற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

3.7.2023 அன்று நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில், இயற்கை வளங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, (மு.கூ.பொ) மற்றும், புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் எல். நிர்மல்ராஜ் ஆகியோர் முன்னிலையில் தமிழ்நாடு கல்குவாரி மற்றும் கிரஷர் உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இக்கூட்டத்தில், சங்க உறுப்பினர்கள் முன்வைத்த கோரிக்கைகள் அனைத்தையும் ஒரு குழு அமைத்து ஆராய்ந்து தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்ற உத்தரவாதம் அளிக்கப்பட்டதை தொடர்ந்து வேலை நிறுத்தப் போராட்டத்தை வாபஸ் பெறுவதாக சங்க உறுப்பினர்கள் அனைவரும் ஏகமனதாக முடிவெடுத்து, 4.7.2023 செவ்வாய்க்கிழமை முதல் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கல்குவாரி மற்றும் கிரஷர்களும் இயங்கும் என்று அறிவித்துள்ளனர். இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

சென்னை, வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர்

# என்.மருதுகணேஷ் தாயார் திருமதி பார்வதி நாராயணசாமி மறைவு!

## கழக முன்னணியினர் அஞ்சலி! இன்று இறுதி ஊர்வலம்!

சென்னை, ஜூலை 6 -

சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் என்.மருதுகணேஷின் தாயாரும் முன்னாள் பொதுக்குழு உறுப்பினரும் , முன்னாள் மாவட்ட மகளிர் அணி தலைவரும், சென்னை மாநகராட்சி 8 வது வார்டு முன்னாள் மாமன்ற உறுப்பினரும்,மொழிப்போர் தியாகியுமான, என்.பார்வதி என்கிறபார்வதிநாராயணசாமி (வயது 70) அவர்கள் உடல் நலக்குறைவு காரணமாக நேற்று (5.7.2023)காலை இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் மாவட்ட, பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள், வழக்கறிஞர்கள், மகளிர் உள்ளிட்ட அனைத்து அணி நிர்வாகிகள் கழக முன்னணி யினர் திரளாகச் சென்று மறைந்த திருமதி பார்வதி நாராயணசாமி அவர்களின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (6.7.2023) மாலை 3.மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு மூலகொத்தளம் இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெறுகின்றன.

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

காஞ்சிபுரம், ஜூலை 6 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் செங்கல்பட்டு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை எதிரில் அமைந்துள்ள ரகமத் மகால் திருமண மண்டபத்தில் தலைமை தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதிய லிங்கம் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ. விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் தா.மோ.அன்பரசன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வீ.தமிழ்மணி, எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், ஆர்.டி.அரசு, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்புச்செழியன், க. அன்புச்செல்வன், ஆதிமாறன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ்,

பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன், எஸ்.சேகர், த.ஜெயக்குமார், வே.கருணாநிதி, ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னாட், செம்பாக்கம் சுரேஷ், மாடம்பாக்கம் நடராஜன், எஸ்.இந்திரன், டி.காமராஜ்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், பையனூர் எம்.சேகர், ஏ.வந்தேமாதரம், மூவரசம்பட்டு ரவி, ஆப்பூர் பி.சந்தானம், நகரச் செயலாளர்கள் எஸ்.நரேந்திரன், டி.பாபு, ஜெ.சண்முகம், எம்.கே.டி.கார்த்திக், கோ.சத்தியமூர்த்தி, பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ், ஆர்.சதிஷ்குமார்

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.கே.இப்ராகிம், ஆர்.டி.பூபாலன், ஆர்.எஸ்.சங்கர், க. தேவேந்திரன், எம்.செல்வகுமார், ம.கணேஷ்பாபு, செ. அருள்தேவி, மு.ரஞ்சன், ஜிஜேந்திரன் ராமு,

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ், செந்தில் தேவராஜ், ஜாகீர் உசேன், ஆர்.ஆர்.ஜெயராம் மார்த்தாண்டம், தி.க.பாஸ்கரன், எஸ்.ஆல்பர்ட், ஆர்.கோவிந்தன், எம்.எஸ்.கதிரவன், ஜான் தினகரன், தாம்பரம் மாநகரக் கழக நிர்வாகிகள் அனகை நரேஷ் கண்ணா, சேலையூர் சதாசிவம், செம்பாக்கம் கண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜி. சுகுமார் சுப்பிரமணியன்

ஜூலை 6 (2020)



பேரறிஞர் அண்ணா அவர்களுடன் நெருங்கி பழகிய கெங்காதரனின் மகனான இவர், இளமைக்காலம் முதலே கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

காஞ்சிபுரம் மாவட்டப் பிரதிநிதி – ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டப் பொருளாளர் – காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அவைத்தலைவர், பொருளாளர் எனப் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

தனது குடும்பத்தில் நடைபெற்ற அனைத்து மண விழாக்களையும் சீர்திருத்தத் திருமணமாக முத்தமிழறிஞர் கலைஞர், பேராசிரியர் மற்றும் கழகத் தலைவர் ஆகியோரின் தலைமையில் நடத்தியவர். அத்துடன் தனது குடும்பத்தில் பிறந்த அனைத்து குழந்தைகளுக்கும் தமிழ்ப் பெயரை சூட்டியவர்.

வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியக்குழு துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

2003ஆம் ஆண்டு தேர்தல் நிதி திரட்டும் பணியில் காஞ்சிபுரம் மாவட்டம் தமிழ்நாட்டிலேயே முதல் மாவட்டமாக ஒரு கோடி ரூபாய் நிதியை வழங்கியதில் மாவட்டச் செயலாளருடன் இணைந்து மாவட்டப் பொருளாளராக பணியாற்றி பாராட்டைப் பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

சென்னை வடக்கு - வழக்கறிஞர் என்.மருதுகணேஷ் தாயார் -

# பொதுக்குழு முன்னாள் உறுப்பினர் திருமதி பார்வதி நாராயணசாமி மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை 6 -

சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் என்.மருதுகணேஷின் தாயாரும் முன்னாள் பொதுக்குழு உறுப்பினரும் , முன்னாள் மாவட்ட மகளிர் அணி தலைவரும், சென்னை மாநகராட்சி 8 வது வார்டு முன்னாள் மாமன்ற உறுப்பினரும்,மொழிப்போர் தியாகியுமான, என்.பார்வதி என்கிற பார்வதி நாராயணசாமி (வயது70) அவர்கள் உடல் நலக்குறைவு காரணமாக நேற்று (5.7.2023)காலை இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தாம்பரம் வ. கன்னியப்பன்

ஜூலை 6 (2007)



தாம்பரம் நகரக் கழகச் செயலாளராக இருபத்தைந்து ஆண்டுகள் சிறப்பாக பணியாற்றியவர்.

தாம்பரம் நகர்மன்றத் தலைவராக ஐந்தாண்டுகள் பணியாற்றி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இந்தி எதிர்ப்பு, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, கறுப்புக் கொடி மற்றும் கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.